# நீல நீந்தும் நண்டு

## சிற்றறிக்கை இல.8

பாக்கு நீரிணையிலும் மன்னார் குடாவிலும் நீல நீந்தும் நண்டு (BSC) மீன்பிடி தொடர்பான உயிரியல் ரீதியான உயிர் வாழ்வுச் சூழல் ரீதியான தகுநிலையை மேம்படுத்தல் மற்றும் முகாமை செய்தலானது,2017 ம் ஆண்டின் கடைசி ஆறு மாதங்களில் சிறிலங்கா நீல நீந்தும் நண்டு மீன்பிடி மேம்படுத்தல் திட்டத்தின் மூலம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப் பட்டது. இதே வேளையிலே சிறிலங்காவின் நண்டு சார் உற்பத்திகளுக்கான சர்வதேச சந்தைகளுடன் மேற்படி மீன்பிடிகளை இணைக்கும் வழங்கல் சங்கிலி தொடர்களின் சமூக மற்றும் பொருண்மிய ரீதியான சரி ஒப்பரவினை மேம்படுத்துவதற்கான முன் முயல்வுகளும் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டன. இந்த நடவடிக்கைகள் தொடர்பான விவரங்கள் நீல நீந்தும் நண்டு செய்தி இதழின் (பதிவு 8)இந்தப் பதிப்பில் தரப்பட்டுள்ளன..

## கடல்வள இருப்பின் உயிரியல் ரீதியான தகுநிலையை மேம்படுத்தல்



2014 ம் ஆண்டில் இருந்து பாக்கு நீரிணையில் மன்னார் மீன்பிடித் தளத்திலும் உள்ள நீலக்கால் நண்டுகளின் தகுநிலை குறித்து வருடாந்தம் மதிப்பீடுகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இந்த மதிப்பீடுகள் எல்லா மீன்பிடித் தளங்களிலும் உள்ள மீன்பிடிச் சமூகங்கள் வழங்குனர்கள் கடலுணவு உற்பத்தியாளர்களின் அனுசரணையோடு மேற்கொள்ளப் படுகின்றன. இந்த கையிருப்பு தகுநிலையானது கலாநிதி ஜெறெமி பிரின்ஸ் (பயோஸ்பெறிக் பிறைவேட் லிமிட்டெட்) மற்றும் கலாநிதி அட்றியன் ஹோர்டிக் (பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக் கழகம்) ஆகியோரால் உருவாக்கப் பட்ட உள்ளார்ந்த குஞ்சு பொரிக்கும் திறன் விகிதத்தினை (மதிப்பீடு செய்வதற்கான) நீளத்தின் அடிப்படையிலான அணுகுமுறை LBSPR யைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது. இந்த LBSPR app The Barefoot Ecologist's Toolbox இல் இலவசமாக பெற்றுக் கொள்ள கூடியதாக இருக்கிறது

மன்னார் வளைகுடா பாக்கு நீரினை நீல நீச்சல் நண்டின் கடந்த மூன்று வருடங்களுக்கான தொகை மதிப்பீட்டு முடிவுகள் (குறியீட்டுப்புள்ளி30%) இங்கே தரப்பட்டுள்ளது நான்காவது வருடார்ந்த தொகை மதிப்பீட்டு முடிவு அடுத்த வெளியீட்டில் வெளிவரும்

| உயர் குறியீட்டுப்புள்ளி | நண்டுத்தொழில் | LBSP முடிவு | | | |
|---|---|---|---|---|---|
| | | 2014/15 | 2016 | 2017 | 2018 |
| 30% | பாக்கு நீரினை | 32% (31% - 33%) | 44% (43% – 45%) | 47% (46% – 49%) | ? |
| | மன்னார் வளைகுடா | 31% (29% - 33%) | 46% (42% – 50%) | 41% (39% – 43%) | ? |

***TSF, NFI*** *மன்னார்வளைகுடாநீல நீச்சல் நண்டின் நான்காவது வருடார்ந்த தொகை மதிப்பீட்டுக்கு நதியுதவி வழங்கி உள்ளன*


## மீன்பிடியின் வாழ்வுச் சூழலியல் தகுநிலையை மேம்படுத்துதல்

யூன் மாதத்திலே பாக்கு நீரிணை மன்னார் வளைகுடா மற்றும் அகல் விரிவான மீன்பிடித் தளங்களில் நீல நீந்தும் நண்டு மீன்பிடி ஏற்படுத்தும் வாழ்வுச் சூழலியல் ரீதியான தாக்கங்களை மதிப்பீடு செய்வதை குஜீ நிறைவு செய்யும் விதத்திலே சான்ரா மொனிக்கா சீ பூட் எல்.எல்.சீ- ஆனது மேலதிக நிதிகளை பங்களிப்பு செய்தது. LKSIM பிறைவேட் லிமிட்டட்டால் உருவாக்கப்பட்ட வலை கண்டு பிடிப்பு (Net finder) app ஆனது ஸ்மாட்போன் ஒன்றினுள் நிர்மாணிக்கப் பட்டிருக்கும் ஜி.பி.ஸ் செயற்பாடு ஒன்றின் உதவியுடன் நீல நீந்தும் நண்டு பிடிக்கும் படகுகளை தடம் தொடர வழிவகுத்திருக்கிறது. களத் தரவுகளை சேகரிக்கும் பணியானது 2017 ஓகஸ்ரில் தொடங்கியது. இந்த வலை கண்டு பிடிப்பு யீ ஆனது மீனவர் படுக்கும் ஒவ்வொரு வலையினுடையவும் தொடக்க புள்ளியையும் முடிவுப் புள்ளியையும் அடையாளம்மிட மீனவருக்கும் உதவுகிறது. பின்னர் மீனவர்கள் தங்களுடைய தொலை பேசியில் உள்ள ஜி.பி.ஸ் செயற்பாட்டையும் இந்த app ஐயும் பயன் படுத்தி அடுத்த நாளில் தங்கள் வலைகளைக் கண்டு கொள்வார்கள்.



இந்த app ஆனது அடுத்த நாளில் தங்கள் வலைகளை நோக்கி நேரடியாக செல்லும் திறன்களை அளிக்கிறது. இது மீனவர்களுடைய நேரத்தையும் மற்றும்படி செலவழிக்கப் படக்கூடிய எரிபொருளையும் மீதப்படுத்த உதவுகிறது. இந்த app ஐப் பயன்படுத்தும் மீனவர்கள் இப்போது வேறு மீனவர்கள் தங்கள் வலைகளை திருட முடியாதபடி தங்கள் வலைகளில் இருந்து கொடிகளை அகற்றி விட முடியும் என்று இப்பொழுது கூறியிருக்கிறார்கள். இந்த app ஐப் பயன்படுத்தும் மீனவர்கள் இந்த இந்த app ஆனது தங்கள் வலைகள் இருக்கும் இடங்களை நோக்கி தங்களை இட்டுச் செல்லும் என்பதனால் கரையில் இருந்து (20 கிமீ வரையான) வெகுதூரங்களில் தங்கள் வலைகளைப் படுக்கும் துணிவை இந்த app தந்திருப்பதாக மேலும் கூறியிருக்கிறார்கள். கரையில் இருந்து தூரமான இடங்களிலுள்ள ஆழமான நீர்பரப்புகளிலே நண்டு மீன்பிடியை மேற்கொள்வதானது மீனவர்களுக்க நன்மையானது (வழமையை விட பெரிய நண்டுகள் ) என்பதுடன் நண்டு மீன் பிடிக்கும் நன்மையானதாகும். (ஸ்ரீ பிடிக்கப்படும் நண்டுகளில் முதிராத நண்டுகள் இல்லாமல் இருத்தல்). இதில் இன்னுமொரு கவரும் விடயம் என்னவென்றால் ஜி.பி.எஸ் -ஐக் கையில் பிடித்திருக்க வேண்டி இருப்பது போல் இதனைப் பிடித்திருக்க வேண்டியதில்லை என்பதாகும். மேலும் மற்றைய தடம் தொடரும் சாதனங்களை போல் இவற்றுக்கு பொருத்தும் கட்டணங்களை அல்லது பராமரிப்புக் கட்டணங்களையோ செலுத்த வேண்டியதில்லை. கடல்சார் வாழ்விடங்கள் மீது மீன்பிடி ஏற்படுத்தும் தாக்கங்களை மதிப்பீடு செய்ய இப்போது பயன்படுத்தப்படும் இந்த app ஆனது எதிர்காலத்தில் சிறிலங்காவினுடைய “நீடித்து நிலைக்கக் கூடிய வளமூலங்களை” கொண்ட நீல நீந்தும் நண்டுகளை தடம் தொடர்வதை மேம்படுத்த பயன்படுத்தப்பட முடியும்.

## பாக்கு நீரினை மீன்பிடி





கடல்சார் வாழ்விடச் சூழல்கள் மீது மீன்பிடி ஏற்படுத்தும் தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்கென பாக்கு நீரிணையில் உள்ள கடல்சார் வாழ்வுச் சூழல்களின் அடிப்படை வரைபடம் ஒன்றை உருவாக்குவதற்கென சதுப்பு நிலத் தாவரங்கள், கடற் புற்கள் மற்றும் பவளப்/ பாறைகள் கொண்ட நீரடி பாறைத் தொகுதிகளின் பரம்பல்களை விவரிக்கும் தேசிய மற்றும் சர்வதேசிய தரவுகள் பயன்படுத்தப் பட்டன. மீனவர்களை அடிப்படையாக கொண்ட வாழ்விட வரைபடம் அமைக்கும் ஆய்வின் ஊடாக மீன்பிடிச் சமூகங்கள் தங்கள் அறிவை பங்களிப்பு செய்தன. “வலை கண்டு பிடிப்பு” app நிறுவப்பட்ட ஸ்மாட் போன்கள் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள ஆறு கிராமங்களில் வாழும் 30 நீல நீந்தும் நண்டு மீன்பிடியாளர்களால் பயன்படுத்தப் பட்டுக் கொண்டிருக்கின்றன. என்பதோடு 97 மீன்பிடி பயணங்கள் இதுவரை தடம் தொடரப்பட்டும் இருக்கின்றன. இந்தத் தரவுகள் பாக்கு நீரிணையில் உள்ள, நீல நீந்தும் நண்டு மீன்பிடியாளர்களின் கிராமங்களுக்கான மீன்பிடித் தளங்களை அடையாளம் காணப் பயன் படுத்தப் பட்டிருக்கின்றன.

.

நீல நீந்தும் நண்டு மீன்பிடியின் உள்ளார்ந்த திறன்கள் மன்னார் வளைகுடாவின் சதுப்பு நிலத் தாவரங்களில் 0மூ ஐயும் கடல் புல் படுகைகளில் 9.6 ஐயும் பவள / பாறைகள் கொண்ட நீரடிப் பாறைகளில் 0.61 % ஐயும் மேல் கவிகை செய்திருப்பதை ஆரம்ப பெறுபேறுகள் சுட்டிக் காட்டுகின்றன (08/04/18 ம் திகதியில் உள்ளபடி ). நீல நீந்தும் நண்டு மீன்பிடியாளர்கள் கடல்சார் பாதுகாக்கப்பட்டபிரதேசங்களில்தமது வலைகளைப் படுப்பதில்லை.இதுவரையிலானபெறுபேறுகள்ஊக்கப்படுத்துபவையாக இருக்கின்றன. பாக்கு நீரிணையிலே மீன்பிடியினுடைய வாழ்வுச் சூழலியல் ரீதியான தாக்கங்கள் தொடர்பான FIP இன் புரிந்து கொள்ளுதலை மேம்படுத்துவதற்காக மேலும் தரவுகள் சேகரிக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றன.

## மன்னார் வளை குடா மீன்பிடி




மேற்படி தரவு மூலவளங்கள் மன்னார் வளை குடாவிலே சதுப்பு நில கடற் புற்கள் மற்றும் தாவரங்கள் பவளப் / பாறைகள் கொண்ட நீரடிப் பாறைத் தொகுதிகள் முதலியவற்றின் பரம்பல்கள் பற்றி விவரிக்கப் பயன் படுத்தப் பட்டன. மீனவர்களை அடிப்படையாகக் கொண்ட வாழ்விட வரைபடம் அமைத்தலின் பெறுபேறுகள் அடிப்படை வரைபடங்களோடு சேர்க்கப்பட்டன. புத்தளம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் வாழும் 30 நீல நீந்தும் நண்டு மீன்பிடியாளருக்கு “வலை கண்டு பிடிப்பு apps பொருத்திய ஸ்மாட்போன்கள் வழங்கப் பட்டன. 08/04/18 வரை 105 மீன்பிடிப் பயணங்கள் தடம் தொடரப்பட்டிருக்கின்றன.

நீல நீந்தும் நண்டு மீன்பிடியின் உள்ளார்ந்த திறன்கள் மன்னார் வளைகுடாவின் சதுப்பு நிலத் தாவரங்களில் 0.7% ஐயும் கடல் புல் படுகைகளில் 16.7% ஐயும் பவள / பாறைகள் கொண்ட நீரடிப் பாறைகளில் 5.6 % ஐயும் மேல் கவிகை செய்திருப்பதை ஆரம்ப பெறுபேறுகள் சுட்டிக் காட்டுகின்றன. இங்கும் பெறுபேறுகள் ஊகப்படுத்துபவையாக இருக்கின்றன. பாக்கு நீரிணையிலே மீன்பிடியினுடைய வாழ்வுச் சூழலியல் ரீதியான தாக்கங்கள் தொடர்பான FIP இன் புரிந்து கொள்ளுதலை மேம்படுத்துவதற்காக மேலும் தரவுகள் சேகரிக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றன.

*மீன்பிடித் தளத்தினுடைய வாழ்வுச் சூழலியல் மேம்படுத்தல்களுக்கு ஸாண்ட்ரா மொனிக்கா சீ பூட்டின் (RVSP) நிதி வழங்கி இருக்கின்றன*

# மீன்பிடியின் முகாமைத்துவத்தை மேம்படுத்தல்




**மாவட்ட முகாமைத்துவ திட்டம்:** 2017 கடைசியில் முதலாவது மாவட்ட மட்ட முகாமைத்துவ திட்ட கலந்துரையாடல் மாவட்ட கடற்றொழில் பரிசோதகர்கள் பிரிவுகளிலும் ஒவ்வொரு மீன்பிடிச் பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள் ஒவ்வொரு மாவட்ட கடற்றொழில் உதவிப்பணிப்பாளரும் மாவட்ட முகாமைத்துவ திட்டத்தை ஐப்பசி மாதம்கடற்றொழில் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தார்கள் அது கார்த்திகை மாதம் பணிப்பாளர் நாயகத்தால் ஆமோதிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்ட மீன்பிடி முகாமைத்துவ திட்டமும் ஒவ்வொரு மாவட்டத்திலுமான அமைவிடம், விஸ்தீரணம், பரப்பு மற்றும் மீன்பிடித் தளத்தின் கடல்சார் எல்லைகள் முதலியவற்றையும் மீன்பிடித் தளத்தை உருவாக்கும் கரையிறங்கும் இடங்களையும் (அதாவது **செயற்பரப்பு)** குறித்து ஒதுக்கும். ஒவ்வொரு மாவட்ட மீன்பிடி முகாமைத்துவ திட்டமும் ஒவ்வொரு மீன்பிடித் தளத்துக்குமான நீல நீந்தும் நண்டு மீன்பிடிக்குரிய (**அறுவடை மூலோபாயம்**) (அதாவது அடித்தளத்தில படுக்கப்படும் வலைகள்) மற்றும் ஒரு நீடித்து நிலைக்கக் கூடியவாறு முகாமை செய்யப்படும் மீன்பிடி சமமான ஒரு மட்டத்திலே வள தகுநிலையை பேணுவதற்கென (அதாவது அளவுத் தெரிவு முறை மற்றும் முயற்சி) மீனவர்களாலும் னுகுயுசு இனாலும் கைக்கொள்ளப்படும் **கட்டுப் படுத்தும் பொறி முறைகள்**- ஐயும் உள்ளடக்கும். பாக்கு குடா மற்றும் மன்னார் வளைகுடா போன்ற மட்டுப்படுத்தப்பட்ட தரவுகள் மற்றும் மூலவளக் குறைபாடு உள்ள மீன்பிடித் தளங்களுக்கு பொருத்தப்பாடான உசாத் துணைப் புள்ளிகளும் ஒவ்வொரு மாவட்ட மீன்பிடி முகாமைத்துவ திட்டத்திலும் குறித்து ஒதுக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மாவட்ட மீன்பிடி முகாமைத்துவ திட்டமும் அடுத்த கையிருப்பு தகுநிலை மதிப்பீடு, முன்னைய கையிருப்பு மதிப்பீடுகளின் பெறுபேறுகள், ஒவ்வொரு மீன்பிடித் தளத்தினதும் வரையறை உசாத் துணைப் புளிகளுக்கு எதிராக கையிருப்பு மதிப்பீட்டினுடைய பெறுபேறுகளின் அடிப்படையிலான **அறுவடைக் கட்டுப்படுத்தலுக்கான விதிகள்** மற்றும் பிரயோகிக்கப்பட இருக்கும் அறுவடை கட்டுப் படுத்தல் (முகாமைத்துவம்) **கருவிகள்** முதலியவை அடங்கிய ஒரு பட்டியலையும் உள்ளடக்கி இருக்கும். இலக்கு அல்லாத மீன் இனங்கள் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச அக்கறைக்குரிய குறிப்பான மீனினங்கள் மீதான மீன்பிடியின் தாக்கத்தை ஆகக் குறைந்த அளவில் பேணுதலுக்கான ஒரு உபபிடிப்பு முகாமைத்துவ மூலோபாயமும் ஒவ்வொரு மாவட்ட மீன்பிடி முகாமைத்துவ திட்டத்திலும் உள்ளடக்கப் பட்டிருக்கின்றன.



ஒவ்வொரு மாவட்ட மீன்பிடி முகாமைத்துவ திட்டத்தின் நடைமுறைப் படுத்தலையும் னுகுயுசு இனுடைய னுகுமு கண்காணிப்பதற்கான ஏற்பாடுகளும் ஒவ்வொரு மாவட்ட மீன்பிடி முகாமைத்துவ திட்டத்தில் குறிப்பிடப் பட்ட ஏற்பாடுகளுக்கு **அமைவாக நடக்கச் செய்தலை** உறுதிப் படுத்துவதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளும் ஒவ்வொரு மாவட்ட மீன்பிடி முகாமைத்துவ திட்டத்திலும் உள்ளடக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மாவட்ட மீன்பிடி முகாமைத்துவ திட்டத்திலும் ஒவ்வொரு மீன்பிடித் தளத்தின் உள்ளேயுமான மீனவர்களுக்கு இடையே ஏற்படும் முரண்பாடுகளை தீர்ப்பதற்கு மீனவர்களும் DFAR உம் கைக் கொள்ள வேண்டிய நடைமுறைகள் மற்றும் 2017.∴.18 இல் மீன்பிடியை மேலும் மேம்படுத்துவதற்கு நடைமுறைப்படுத்த வேண்டிய செயல்பாடுகளின் பட்டியல் ஒன்றையும் கொண்டிருக்கின்றன. இந்த ஒவ்வொரு மாவட்ட மீன்பிடி முகாமைத்துவ திட்டமானது முப்பது மார்ச் 2018 க்கு முன் மேற்கொள்ளப் படவிருக்கும் நாலாவது வருடாந்த இருப்பு மதிப்பீட்டின் பெறுபேறுகள் வெளியிடப் படுவதை தொடர்ந்து மீளாய்வு செய்யப்படும் என்பதோடு, அவசியம் ஏற்பட்டால் நிகழ்கால மட்டத்துக்கும் கொண்டு வரப்படும்



**சிறிலங்கா நீல நீந்தும் நண்டு மீன்பிடி விதிகளின்:** யூன் மாதத்தில் FI இனால் பணிப்பாளர் நாயகத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட சிறிலங்கா நீல நீந்தும் நண்டு மீன்பிடி விதிகளின் முதல் வரைவானது, ஒக்ரோபரில் சட்ட அதிகாரியிடம் இருந்து கிடைத்த கருத்துகள் மற்றும் அவதானிப்புகளை உள்ளடக்கும் விதத்தில் மீளாய்வு செய்யப்பட்டது. DFAR இனால் மீளாய்வுகள் அங்கீகரிக்கப்பட்டதும் இந்த வரைபானது சட்டமா அதிபர் திணைக்களத்தின் கருத்தைப் பெறுவதற்கென பணிப்பாளர் நாயகத்தினால் அனுப்பி வைக்கப்படும்.

# சமூக பொருளாதார பங்கு முன்னேற்றம்

சிறிய அளவுகளிலான மீன்பிடித் தளங்களை நீடித்து நிலைக்கக் கூடியதாக முகாமை செய்வதில் சமமான முக்கியம் வாய்ந்தவையாக சமூகப் பொறுப்பும் பொருண்மிய சமத்துவமும் இருக்கின்றன. நீடித்து நிலைக்கக் கூடிய வளமூலம் கொண்ட கடலுணவுகள் மூலம் பெறப்படும் நன்மைகள், வழங்கல் சங்கிலி தொடர் நெடுக சமத்துவமான முறையில் பகிரப்படாவிட்டால் இந்த மூலவளங்களை சிறிய அளவில் மீன்பிடியை மேற்கொள்ளும் மீனவர்கள் நீடித்து நிலைக்கும் விதத்தில் வாய்ப்பாக பயன் படுத்துவதற்கான ஊக்குவிப்பு எங்கே இருக்கிறது? ஒரு மீன்பிடித் தளம் அல்லது வழங்கல் சங்கிலி தொடரானது சிறுவர் தொழிலாளர் தன்னுரிமையற்ற மற்றும் / அல்லது அடிமைத் தொழிலாளர் பயன்படுத்தினால் அல்லது பணியாளர்களின் வேலைச் சூழல்கள் கௌரவமானவையாக இல்லா விட்டாலும் நுகர்வோர் “**நீடித்து நிலைக்கக் கூடிய வளமூலங்கள்**”- இல் இருந்து பெறப்படும் கடலுணவுகளை வாங்குவார்களா?



கடந்த 4 வருடங்களாக குஜீ ஆனது, மீன்பிடியோடு தொடர்பு பட்ட, பிரதானமாக கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனை செய்தல் உடன் தொடர்பு பட்ட சிறிய அளவு தொழில்களை ஆரம்பிக்க அல்லது மேம்படுத்தவென 3.0 மில்லியன் சிறிலங்கா ரூபாய்களை (20,000 அமெரிக்க டொலர்கள்) மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி இருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் தமது உறுப்பினர்களிடம் இருந்து கடலுணவுகளை வாங்கி நேரடியாக வழங்குனர்கள் ∴ உற்பத்தியாளர்களுக்கு விற்பனை செய்யும் விதத்திலே ILO UN LEED செயற் திட்டமானது மேலும் 9.0 மில்லியன் சிறிலங்கா ரூபாய்களை (60,000 அமெ.டொலர்கள்) வழங்கியுள்ளது. தொழில் முனைவு இயலுமையை கட்டி எழுப்புவதும் வழங்கல் சங்கிலிகளை குட்டையாக்குவதும் சிறிலங்கா நீல நீந்தும் நண்டு வழங்கல் சங்கிலிகளிலே சமத்துவத்தை மேம்படுத்துவதில் உள்ள முக்கியமான விடயங்களாக இருக்கின்றன..

சிறிலங்கா மீனவர்கள் மட்டுமே, சிறிலங்கா நீல நீந்தும் நண்டுகளை அறுவடை செய்கிறார்கள் சிறிலங்காவின் நீல நீந்தும் நண்டு பிடிக்கும் படகுகளில் அல்லது வழங்கல் சங்கிலிகளில் சிறுவர் தொழிலாளர்கள் / புலம் பெயர், தன்னுரிமை அற்ற அல்லது அடிமைத் தொழிலாளர்கள் வேலை செய்வதற்கான சான்றுகள் எவையும் இல்லை. சிறிலங்காவின் நீல நீந்தும் நண்டு மீன்பிடியை சிறிலங்காவின் நீல நீந்தும் நண்டுகளுக்கான சாவதேச சந்தைகளுடன் இணைக்கும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சொந்தமாக இருக்கும் பதனிடும் மையங்களில் கௌரவமான வேலைச்சூழல் காணப்படுவதை ILO UN LEED செயற் திட்டம் ஊக்கப் படுத்துகிறது.

*சமூக மற்றும் பொருண்மிய சரி ஒப்பரவுகளை மேம்படுத்தலுக்கு ஐநாவின் பொருண்மிய அபிவிருத்தி ஊடான உள்;ர் வலுவூட்டல் (LEED) நிகழ்வுத் திட்டத்தின் தொழில் அமைப்பு மற்றும் NFI நண்டுப் பேரவை கூட்டாக நிதி வழங்கி இருக்கின்றன*

# SLBSC மீன்பிடி / FIP தகுநிலை அறிக்கை

ஒவ்வொரு ஆறு மாதமும் FIP ஆனது ஒரு உத்தியோக பூர்வமற்ற, அங்கீகாரமற்ற, அதிகாரம் வழங்கப் படாத மீன்பிடித்தள மதிப்பீடு ஒன்றை நீடித்து நிலைக்கக் கூடிய வளமூலங்களில் இருந்து பெறப்படும் கடலுணவுக்கான சர்வதேச நியமங்களில் மூன்றின் அடிப்படையில் மேற் கொண்டது. யூன் 2017 முடிவிலே மீன்பிடித் தளமானது பின்வரும் நிலைகளை எட்டியிருக்கிறது. என்று FIP நினைக்கிறது....

**SFP கட்டம் 6இல்** இருக்கிறது – சுயாதீன சர்வதேச சான்றுப் படுத்தல் - SLBSC மீன் பிடியானது தற்போது மொண்ரெறே பே அக்கு வேறியம்ஸ் சீ பூட் வோச் நிகழ்வுத் திட்டத்தினால் சுயாதீனமான முறையில் மதிப்பீட செய்யப் பட்டுக் கொண்டிருக்கிறது

MSC இனுடைய மீன்பிடித் தள மதிப்பீட்டு முறையில் அடிப்படையில் **0.70** புள்ளிகளைப் பெறும் (இலக்கு, 0. 60)

கடலுணவு கண்காணிப்பு நிகழ்வுத் திட்டத்தினுடைய மீன்பிடித் தளங்களுக்கான வழி முறைகளின் அடிப்படையில் **2.98** புள்ளிகளைப் பெறும் (இலக்கு 2.20)

சிறிலங்கா கடலுணவு ஏற்றுமதியாளர் சங்கத்தின் (SEASL) சார்பில் FIP ஆனது 2013 ம் ஆண்டிலிருந்து SLBSC மீன்பிடியை மேம்படுத்துவதற்கென தேசிய மீன்பிடி நிறுவக நண்டுப் பேரவையால் உதாரத்துவமாக வழங்கப்பட்ட நிதி ரீதியான ஆதரவுக்காக அதற்கு நன்றி கூறுகிறது. அத்துடன் இந்த நீல நீந்தும் நண்டு செய்தி இதழில் குறிப்பிடப் பட்டிருக்கும் உப – செயல் திட்டங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வற்றிற்கு கூட்டு நிதி யூட்டம் அளித்த சர்வ தேச தொழில் அமைப்பின் பொருண்மிய அபிவிருத்தியூடாக உள்;ரில் வலுவூட்டல் செயற் திட்டம், சிக்கன் ஒப் த சீ புறோஸிண் சீ பூட்ஸ், ஸாண்ரா மொணிக் சீ பூட்ஸ் மற்றும் பி'வைஸ், தப்ரபேன் சீ பூட் பிறைவேட் லிமிட்டட் மற்றும் பிறெ' கச் பிறைவேற் லிமிட்டட் ஆகிய நிறுவனங்களுக்கும; FIP நன்றி கூறுகிறது.

நீல நீந்தும் நண்டு சிற்றறிக்கையின் ஆறு தொகுதிகளையும் தமிழ் சிங்களம் ஆங்கில மொழிகளில் கிடைக்கக் கூடியதாக உள்ளன. ஒரு பிரதியை பெறுவதற்கு தயவு செய் steve@pelagikos.lk இற்கு e-தபால் அனுப்பவும்